பரிசீலனை செய்யப்படும். தற்போது ஆதிவாசிகளுக்கு அந்தத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகிற எண்ணம் இல்லை. இது தனியாக ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்துகிற எண்ணத்தோடு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்கு கழிவுப் பஞ்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண். 516 : திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கென கழிவுப் பஞ்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அது எங்கு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கழிவுப் பஞ்சாலைத் திட்டம் இப்போதில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை மறுபடியும் மறு பரிசீலனை செய்து, எங்கெங்கே எல்லாம் இந்த அரிசன மக்களுக்கும் இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வழி செய்ய முடியுமோ அந்த வகையிலே ஆராய்ச்சி செய்து அதற்கு வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 29—1—1982 அன்று தலைமைச் செயலர் தலைமையிலே கூடிய அரசுச் செயலாளர்கள் கூட்டத்தில் கழிவுப் பஞ்சாலைத் தொழிலில் தற்போது தேக்க நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் ஆதி திராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக எந்தவிதமான கழிவுப் பஞ்சாலைகளும் அமைக்க வேண்டியதில்லையென்ற அளவில் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நிரந்தரத் தொழில்கள் தர வேண்டுமென்ற உணர்வோடு இந்த அரசு பல்வேறு வகையில் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துகின்ற வகையில், இருக்கக்கூடிய வசதிகளின் அடிப்படையில் எந்த, எந்தத் தொழில்கள் உள்ளனவோ அவற்றைத் தேர்ந்தெடுத்து அந்த மக்களுக்கு தற்போது உதவ இந்த அரசு முன் வந்திருக்கிறது.

[முற்பகல் 10—00.]

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று சொன்னாலும் கூட, நெல்லை மாவட்டத்தை பொறுத்தளவில் அங்கே ஆதிதிரா

1982 மார்ச் 15]

விட மக்கள் அதிகமாக இருப்பதன் காரணமாக அந்தக் கழிவுப் பஞ்சாலை அமைப்பதை மீண்டும் மறுபரிசீலனை செய்து நெல்லை மாவட்டத்தில் அமைக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது கழிவுப் பஞ்சாலை இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் சமூகத்திலே தள்ளப்பட்ட காரணத்தினால் கழிவுப் பஞ்சாலை கேட்கவில்லை. ஆனால் பொருளாதாரத்திலே வசதிபெற்றுள்ள ஆதி திராவிட மக்கள் நல்ல பஞ்சாலையை, தங்களுடைய முயற்சியின் காரணமாக அமைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கு அரசு உதவி செய்யுமா ? இந்த மூன்றாண்டு திட்டத்தை அரசு பரிசீலித்து வருவதாகச் சொன்னார்கள். அதன் படி இப்படி நல்ல பஞ்சாலை அமைக்க வருகின்றவர்களுக்கு தனிச் சலுகை காட்ட அரசு முன் வருமா என்பதை அறியவிரும்புகிறேன். அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே அமைக்க முன் வந்தால் அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, இந்த மக்களைப் பொறுத்தவரையில் அவர்களை தொழில் துறையிலே உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையிலே அரசு பணியாற்றி வருகின்றது. தற்போது ஏறத்தாழ தோல் தொழில்கள், கழிவுப் பருத்தி நூற்பாலை, பனியன் தொழில், கிராம நெசவு மையங்கள், கல் உடைப்பு போன்ற பல்வேறு வகையில் அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதாக இருக்கக் கூடிய தொழிற்களிலே ஈடுபடவேண்டும் என்ற உணர்வோடு அரசு திட்டங்களைத் தீட்டி இந்த மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்தில்தான் பணியாற்றிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கக் கூடிய கருத்துக்களையும் அரசு நிச்சயமாக பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]